கோபிசெட்டிபாளையம் நகராட்சிஆணையாளரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு. மு. மங்கையர்க்கரசன்.M.A.,

ந.எண்க. 447202/51 எப்/ **நாள் . 02.12.2025**

பொருள்: மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – வீரபாண்டி கிராமம், வார்டு-D, பிளாக் – 20 நகரளவை - எண்.9/1,9/3,10/1,10/3,24/1,24/3,25/1,25/3, பழைய க.ச.எண்.244/A.B pt , 245/1pt இல் – 7892 சதுரமீட்டர் (1.95 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUR APPROVAL 234/2025 என எண்ணிடப்பட்டு உத்தரவு பெறப்பட்டது – இறுதி உத்தரவு வழங்குதல் - தொடர்பாக

பார்வை:

1. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020,
2. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 09.12.2020 மற்றும் அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 16.07.2022,
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணைய வழி உத்தரவு ந.க.எண்.VLJWSFKO/2025/TCP நாள்.28.07.2025
4. தானப்பத்திர ஆவண எண்.2296/2025 நாள்.14.07.2025
5. திரு.V.R.R. சென்னியன்கிரி, 2. T.பழனிச்சாமி அவர்களின் விண்ணப்பம் நாள்:29,07,2025
6. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.25.08.2025
7. மனுதாரரின் மனைப்பிரிவிற்கு மூன்றாம் நபர் தர பரிசோதனைக்கான அரசு பொறியியல் கல்லூரி (IRTT) – இல் வழங்கப்பட்ட சான்று நாள்.17.10.2025
8. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்அவர்களின்உட்பிரிவு உத்தரவு எண். 2025/10/31/000750SD நாள்.07.11.2025
9. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள். 07.11.2025
10. நகர்மன்ற தீர்மான எண்.1390 நாள்:27.11.2025

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – வீரபாண்டி கிராமம்வார்டு ,-D – பிளாக் ,20 நகரளவை - எண்.9/1,9/3,10/1,10/3,24/1,24/3,25/1,25/3, பழைய க.ச.எண்.244/A.B pt , 245/1pt இல் – 7892 சதுரமீட்டர்

(ஏக்கர் 1.95) பரப்பளவு உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2 இல்காணும் உத்தரவில் சாலை வரைபட ஒப்புதல் அளித்து உத்திரவிடப்பட்டும் இதன் பின்னர் SWP/DTCP/ERODE/LAYOUR APPROVAL 234/2025 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடுஅவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில்அமையும் பொதுஒதுக்கீடுகளை பார்வை 3 இல் கண்டவாறு நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்களை தனித்தனியாக உட்பிரிவு செய்து பார்வை 7 இல் கண்டவாறு வட்டாட்சியரின் உத்தரவு வரப்பெற்றது. மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் ,நகராட்சி கணக்கில் நாள்15.11.2025. வரவாக்கப்பட்டுள்ளது .

மேற்படி மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவின்படியும், இந்நகராட்சி பொறியர் பிரிவின் 12.11.2025 -ஆம் நாளிட்ட குறிப்புகளின் பேரிலும் ,பார்வை 9இல் காணும் தீர்மானத்தில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

எனவே, நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடுஅவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின்படியும், பொறியியர் பிரிவின் குறிப்புகளின் அடிப்படையிலும், பார்வை 9இல் காணும் நகர்மன்றத் தீர்மான ஒப்புதலின் வீரபாண்டி கிராமம்வார்டு ,-D - பிளாக் ,20 நகரளவை - எண்.9/1,9/3,10/1,10/3,24/1,24/3,25/1,25/3, பழைய க.ச.எண்.244/A.B pt , 245/1pt இல் - 7892 சதுரமீட்டர் (ஏக்கர் 1.95) பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் 34 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ERODE/LAYOUR APPROVAL 234/2025 என எண்ணிடப்பட்டு நகர ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதிஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>சிறப்புநிபந்தனைகள்</u>

1. மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும் .

2. இம்மனைப்பிரிவில் வடிகால், கழிவுநீர் செல்வது தொடர்பாக பொதுபிரச்சனை ஏற்படும்போது மனைப்பிரிவுஉரிமையாளரே தனது சொந்த பொறுப்பில் தீர்வுசெய்ய கொள்ள வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

3. மேற்படி மனைப்பிரிவில் நகராட்சி சாலைகளிலோ, நகராட்சிக்கு சொந்தமான இடத்திலோ எவ்வித ஆக்கிரமிப்புகளும் ஏற்படுத்த கூடாது மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவை எவ்விதி முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

SWP/DTCP/ERODE/LAYOUR APPROVAL 234/2025

மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

02/12/2025

ஆணையாளர்

கோபிசெட்டிபாளையம் நகராட்சி

4.12.2024

பெறுநர்

திரு. V.R.R..சென்னியன்கிரி,

திரு..T.பழனிச்சாமி

கதவு எண்.17, URC**நகர்**

வீரப்பாளையம், திண்டல்

ஈரோடு 638012

நகல்

1. மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு
2. தமிழ்நாடு ரியல்எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.
3. கோபிசெட்டிபாளையம் 1ஆம் எண் இணை சார்பதிவாளர்
4. வட்டாட்சியர்.கோபிசெட்டிபாளையம் ,
5. நகரமைப்பு அலுவலர் கோபிசெட்டிபாளையம்
6. நகராட்சி பொறியாளர், கோபிசெட்டிபாளையம்
7. உதவி வருவாய் அலுவலர். கோபிசெட்டிபாளையம்